

தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த, பொருளாளர் எல்.கே.சுதீஷ், பாண்டிச்சேரி ராமச்சந்திரா மருத்துவமனை சேர்மன் ராதா ராமச்சந்திரன் ஆகியோரின் தாயாருமான, கே.அம்சவேணி (83) நேற்று முன்தினம் (07.10.2025) காலை வயது மூப்பின் காரணமாக மறைவெய்தினார். இந்நிலையில், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, சாலிகிராமத்தில் உள்ள இல்லத்திற்கு நேரில் சென்று பிரேமலதா விஜயகாந்தின் தாயார் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை யொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 231 வது நாள்!

## கொளத்தூர் மேற்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, அக்.9-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 231 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (08.10.2025), கொளத்தூர் மேற்கு பகுதி: 1) வட்டம் 69, எஸ்.ஆர்.பி.கோயில் தெரு, அகரம். 2) வட்டம் - 69அ, ஜி.கே.எம். காலனி, 2வது தெரு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொது மக்களுக்கு காலை உணவு வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் எ.நாகராசன், ஐ.சி.எப்.வ.முரளிதரன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம.அசோக் குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், டி.யோகப்பிரியா, என். தாவூத் பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி,

வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பொன்முடி, கே. ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என். பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே. ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க. பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ந.திலிப்குமார் தலைமை!

# கொளத்தூர் மேற்கு பகுதி சார்பில் முப்பெரும் விழா - இளைஞர் அணி பயிற்சி பாசறைக் கூட்டம்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி, தமிழன் பிரசன்னா சிறப்புரை!

சென்னை,அக்.9-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில், கொளத்தூர் மேற்கு பகுதியில், முன்னேற்றப் பாதையில் முப்பெரும் விழாவை முன்னிட்டு “முப்பெரும் தொடர்- 13” உழைப்பின் எழுச்சியே அன்பாலயம்! உடன்பிறப்பு வணங்கும் அறிவாலயம் எனும் தலைப்பில் கொளத்தூர், திரு. வி.க.நகர் இளைஞர் அணி பயிற்சி பாசறை கூட்டம் 12.10.2025, ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 06.00 மணியளவில், சென்னை, ஜி.கே.எம்.காலனி, அரிச்சந்திரா மைதானத்தில் நடைபெறுகிறது.

இப்பயிற்சி பாசறை கூட்டத்தில், கொளத்தூர் மேற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ந.திலிப்குமார் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு, எ.நாகராசன் எம்.சி, ஐ.சி.எப்வ.முரளிதரன், செ.தமிழ்வேந்தன், எம். சாமிகண்ணு, வானவில் விஜய் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.தனசேகர், ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க. வினோத், ஜி.ஜெ.பிரபு, ஆர். டி.சங்கர்நானா, க.பிரசாத், ஜெ. மணிகண்டன், ப.ஸ்ரீதர் ராஜன், ஆர்.இளங்கோ, மு.தாவூத் உசேன், ஜீ.பிரபாகரன்(எ) பரத், ம.சரண்ராஜ், தி.நிர்மல், தி.கணேஷ், அ. கிளமேன்ட் சிரில், க. மோகன், அ.வினோத், ஜெ.ராஜப்பா, மு.சந்தானம், எஸ்.புவனேஷ், ரா.மணிகண்டன், ரா.விஜய், உ.விக்னேஷ், வி.டில்லிராஜ் வரவேற்கின்றனர்.

இப்பயிற்சி பாசறை கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி,- என்றும் திராவிடம் வெல்லும் தத்துவம் எனும் தலைப்பிலும், கழக செய்தி தொடர்பு இணைச்செயலாளர் தமிழன் பிரசன்னா- தியாகத்தில் எழுந்த திராவிடம் எனும் தலைப்பிலும் உரையாற்றுகின்றனர்.

மேலும் இப்பயிற்சி பாசறை கூட்டத்தில் மேயர் பிரியாராஜன், டாக்டர்.கலாநிதிவீராசாமி எம்.பி, இரா.கிரிராஜன் எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.எ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன் இரா.விடுதலை, என்.கிருஷ்ணமூர்த்தி, சி.மகேஷ்கமார், கே.சந்துரு, தேவஜகர், புனிதவதிஎத்திராசன் எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி, சரிதா மகேஷ்குமார், எம்.சி, எஸ். பன்னீர்செல்வம், பி.ஜெ. துளசிங்கம், லயன்.பி.உதய சங்கர், நா.துலுக்காணம், இரா.வீரமணி, எம். பெரோஸ்கான், துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், கா.ராஜ்முகமது, கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

இப்பயிற்சி பாசறை கூட்டத்தில் வட்ட கழக செயலாளர்கள் எம்.டி.தமிழ்செல்வன், செ.முருகன் நன்றி கூறுகிறார்கள்.

## ஆவடியில் உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி

# மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள்!

## அமைச்சர் ஆவடி சாமு.நாசர் தொடங்கி வைத்து பரிசு வழங்கினார்!

திருவள்ளூர் அக் 09;

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி நாசரேத் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் நடைபெற்ற உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தேசிய மற்றும் விளையாட்டு கொடிகளை ஏற்றி வைத்து, ஒலிம்பிக் ஜோதியினை ஏற்றி வைத்து போட்டிகளை துவக்கி வைத்தார்கள்.

மேலும், வண்ணப் பலூன்கள் மற்றும் வெண் புறாக்களை பறக்கவிட்டு போட்டிகளை துவக்கி வைத்தார்கள். 100மீ ஆண்கள் மற்றும் பெண்களுக்கான ஓட்டப்பந்தய போட்டிகளை கொடியசைத்து துவக்கி வைத்து, வெற்றி பெற்றவர்களை பாராட்டி பதக்கம் மற்றும் கேடயங்களை வழங்கினார்

இவ்விழாவில் 21 சிறப்பு பள்ளிகளில் இருந்து 800 மாணவ மாணவியர், தொண்டு நிறுவனங்கள், தாளாளர்கள், சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பங்கேற்றனர். 19 வகையான விளையாட்டுப் போட்டிகள் ஆண், பெண் இரு பிரிவினராக நடத்தப்பட்டது. இவ்விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவ, மாணவியருக்கு சிறப்பு பரிசுகள், சான்றிதழ்கள் மற்றும் கோப்பைகள் வழங்கப்பட்டது. இப்போட்டிகளில் விஷயலம் சிறப்புப் பள்ளி, ஃப்யித் சிறப்பு பள்ளி, சான்கல்ப் சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகளுக்கான சங்கல்ப் கற்றல் மையம், ஜெயம் சிறப்புப் பள்ளி, அரவிந்த் அறக் கட்டளை, சத்யலோக் சிறப்புப் பள்ளி, ஹோப் EIC ஆட்டிசத்திற்கான நம்பிக்கை, ஜீவன் சிறப்புப் பள்ளி, பால விஹார், எட்வின் சிறப்புப் பள்ளி, அன்பு மலர் சிறப்புப் பள்ளி, கிரேசி சிறப்புப் பள்ளி, ராஸ் சிறப்புப் பள்ளி, ஹோப் சிறப்புப் பள்ளி, கார்மல் சிறப்புப் பள்ளி, மதர் தெரசா ஆகிய பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள் கலந்துக் கொண்டனர். இந்நிகழ்வு அனைவருக்கும் சம வாய்ப்பு என்ற கொள்கையை வலியுறுத்துகிறது. நாம் சேர்ந்து ஒரு தடையற்ற உலகை உருவாக்க வேண்டும் என்பதையும் உறுதி செய்கிறது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சீனிவாசன், தனியார் கல்லூரி செயலாளர் ஹென்றி மாரிஸ், கல்லூரி முதல்வர் மேரி ஏஞ்சலின் சந்தோஷம், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், ஆவடி மாநகர பொறுப்பாளர் சன்பிரகாஷ் ஆவடி வடக்கு பகுதி செயலாளர் பொன்.விஜயன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத், ஆவடி மாநகர நிர்வாகி வி. சிங்காரம், உள்பட மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர் வீராங்கனைகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.




மேயர் திருமதி ஆர்.பிரியா , இராயபுரம் மண்டலம், வார்டு58, ரிப்பன் கட்டட வளாகத்தின் பெரியமேடு சாலைப் பகுதியில் நேற்று (08.10.2025) மாநகராட்சியின் புதிய கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள முதல்வர் மருந்தகத்தினை பயன்பாட்டி ற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் துணை மேயர் .மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## துணை மேயர் மு.மகேஷ்குமார் பங்கேற்பு!

# ரிப்பன் கட்டட வளாகத்தில் முதல்வர் மருந்தகம்!

## மேயர் ஆர்.பிரியா திறந்து வைத்தார்!

சென்னை,அக்.9-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று (08.10.2025) மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், ரிப்பன் கட்டட வளாகத்தின் பெரியமேடு சாலைப் பகுதியில் ரூ.12 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள மாநகராட்சியின் புதிய கட்டடத்தில் முதல்வர் மருந்தகத்தினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சுதந்திர தின உரையில் அறிவிக்கப்பட்ட முதல்வர் மருந்தகம் எனப்படும் இந்தத் திட்டமானது 24.02.2025ல் செயல்பாட்டிற்கு வந்துள்ளது. தமிழ்நாடு முழுவதும் 1000 முதல்வர் மருந்து கடைகள் மூலம் ஜெனரிக் வகை மருந்துகளைக் குறைந்த விலையில் ஏழை, எளிய, நடுத்தர மக்கள் அனைவருக்கும் தரமான மருந்து மற்றும் மாத்திரைகளை வழங்க வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் மூலம் முதல்வர் மருந்தகங்களுக்கு 294 ஜெனரிக் மருந்துகளை கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை மாவட்டத்தில் 44 முதல்வர் மருந்தகங்கள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவற்றுள் 9 மருந்தகங்கள் தொழில் முனைவோர்களும், 35 மருந்தகங்கள் கூட்டுறவு நிறுவனங்களாலும் நடத்தப்பட்டு வருகிறது. இவற்றுக்கு தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மூலமாக தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்திலிருந்து மருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவு சங்கத்திற்கு அனுப்பப்பட்டு, அதன் மூலமாக முதல்வர் மருந்தகங்களுக்கு தேவைப் பட்டியலின்படி அனுப்பி வைக்கப்படுகிறது.

முதல்வர் மருந்தகத்தில் கொள்முதல் விலையிலிருந்து 25% தள்ளுபடியில் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுவதால், மக்கள் மருந்தகத்தை விட விலை மிகவும் குறைவாக இருக்கிறது.

முதல்வர் மருந்தகத்தில் தனியார் மருந்துக் கடைகளை விட 75% வரை விலை குறைவாகக் கிடைக்கிறது.

இந்நிகழ்வில் துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், தலைமைப் பொறியாளர் (பொது) திரு.எஸ்.ராஜேஸ்வரி, கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் மு. உமா மற்றும் அலுவலர்கள் பங்கேற்றனர்.



கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய கிளை கழக ஆய்வு கூட்டம் கும்மிடிப்பூண்டி கி.வே. ஆனந்த் குமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தொகுதி பார்வையாளர் கவீ.கணேசன் ஆகியோர் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள். உடன் மு.பகலவன், வெ. அன்புவாணன், ஜெ.சுரேஷ், துர்கா வெங்கடேசன், கே.ஜி. நமச்சிவாயம் உட்பட கழக நிர்வாகிகள் கிளைக் கழகச் செயலாளர்கள் கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆரணி கோ. வெற்றிவீரன்

### அக்டோபர் 9 (2019)



1954ல் ஆரணி பேரூர்க் கழகம் துவங்கப்பட்டபோது, கழகத்தில் இணைந்து கழகப் பணியாற்ற துவங்கினார்.

மாவட்ட பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் என பொறுப்புகள் வகித்தவர்.

‘நம்நாடு’ இதழில் துணை ஆசிரியராக பணியாற்றியதோடு, முரசொலியில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதியவர்.

கருப்புக் கொடி போராட்டம், கைலாசம் கமிஷன் எரிப்பு, இந்தி திணிப்பு எதிர்ப்பு, இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் என தலைமை அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# செஞ்சி ஒன்றியத்தில் புதிய நாடக மேடை!

செஞ்சி, அக். 9 -

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் வரிகல், கொணலூர் ஊராட்சிகளில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ்தலா 8.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய நாடக மேடை கட்டிடம் கட்டபப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

ஊராட்சி மன்ற தலைவர் சுபா குமார் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டுவரிக்கல், கொணலூர் ஆகிய ஊராட்சிகளில் தலா 8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்பட்ட புதிய நாடக மேடை கட்டிடத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். நிகழ்ச்சியில் அ.தி.மு.க. வைச் சேர்ந்த நிர்வாகி பழனி அக் கட்சியிலிருந்து விலகி முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தார் தி.மு.க.வில் இணைந்த நிர்வாகி பழனிக்கு சால்வை அணிவித்து வரவேற்று வாழ்த்துத் தெரிவித்தார்.

இதில் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,அனந்தபுரம் நகர அவை தலைவர் டாக்டர் கல்யாண் குமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் அனையேரி ரவி, பாடிப்பள்ளம் தாட்சாயணி கார்த்திகேயன், ஒன்றிய நிர்வாகிகள் செல்வமணி,குமார், வாசு, அய்யாதுரை, உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தத்துவமேதை டி.கே.சீனிவாசன்

## 36வது ஆண்டு நினைவு வணக்கம்

தோற்றம்
14.11.1922



மறைவு
9.10.1989

*என்றும் தங்கள் வழி நடக்கும்*

டி.கே.எஸ்.இளங்கோவன், Ex. M.P., நளினி
(செய்தி தொடர்பு குழு தலைவர், தி.மு.க.)
டி.கே.எஸ்.மணிவண்ணன் குணபூஷணி
டி.கே.எஸ்.தமிழ்ச்செல்வி எஸ்.தமிழ்மணி
திருமதி கீதாலட்சுமி வில்லாளன்
திருமதி. மாதவி – ஜான் விஜய்,
திருமதி. இ.தரணி – எஸ்.ராகவேந்திரமூர்த்தி,
சீனிவாசன், மேகலா, பரிதி ஈசா,